450

450

# LALITA
# BALAR TAMIL VACHAKAM

## BOOK II

BY

T. A. RAJARATNAM PILLAI

D. NATARAJAN, B.A.,



LALITA VILAS BOOK DEPOT

PLICANE :: MADRAS

TB
031(2)
N41
85063

லலிதா

# பாலர் தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

[புதிய பாட திட்டத்தைத் தழுவியது]

ஆசிரியர் :
T. A. இராஜரத்தினம் பிள்ளை
D. நடராஜன் பி.ஏ.,

லலிதா விலாச புத்தகசாலை
திருவல்லிக்கேணி :: சென்னை

காபிரைட்] 1941 [விலை 4 அணா

முதற் பதிப்பு 1941

# முகவுரை

எமது லலிதா நூதன தமிழ் வாசகம் இரண்டாம் புத்தகத்தைப் புதிய பாட திட்டத்தைப் பின்பற்றித் திருத்தி இப் புத்தகம் அமைக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 400 புதிய சொற்கள் இதனில் கையாளப்பட்டுள்ளன. மாணவர், திருத்தமாகப் பேசவும், சரியான சொற்களை உபயோகித்துத் தம் கருத்துக்களை வெளிப்படுத்தவும் கற்றுக் கொள்வதே மொழிப் பயிற்சிக்குரிய முதற்படி. ஆகவே, ஒவ்வொரு பாடத்தின் கீழும் சில கேள்விகள் வாய்மொழியில் விடையளிக்கத் தக்கனவாகக் கொடுக்கப்டுள்ளன. எளிய நாடகங்களை நடித்தலாலும், எளிய சம்பாஷணைகளை நடத்துவதாலும் தொடர்ந்த கருத்துக்களை அபிநயங்களுடன் வெளிப்படுத்தக்கூடும். அம்முறைக்கும் ஒத்தபடி சில பாடங்களும் கேள்விகளும் அமைக்கப்பட்டுள்ளன. நூற்றுக்கு நாற்பது வீதமாவது பிள்ளைகள் தாமாகவே மௌனமாகப் பாடங்களைப் படித்து, அவற்றிலுள்ள பொருள்களை அறிய வேண்டும். அப்பயிற்சியை ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்திலும் பொதுவாகவும், கதைப் பாடங்களில் சிறப்பாகவும் கொடுத்தும், பிள்ளைகளின் அறிவைப் பயிற்சிகளில் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளைக் கேட்டும் பயிற்றுவிக்கலாம். சில எளிய இனிய பாடல்கள் பிள்ளைகள் இன்பமாய்ப் பாடி அனுபவிக்கும் வகையில் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றை உரிய செய்கைகளுடனும் குரலமைப்புகளுடனும் பாடக் கற்பிக்கவேண்டும். மிக எளிய இலக்கணப் பயிற்சிகளும் உதாரணங்கள் வழியாக இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆசிரியர்கள் சமயோசிதப்படி பெருக்கிக்

கொளவார்களாக. தினந்தோறும் பிள்ளைகள் ஓரளவு நல்ல கையெழுத்துப் பயிற்சி பெறுதல் இன்றியமையாதது. பென்ஸிலை நன்ருகப் பிடித்து, வர வர வேகமாகவும் எழுதக் கற்றுக் கொள்ளவேண்டும். அதற்கும் இலகுவான பயிற்சிகள் காட்டப்பட்டுள்ளன.

இப்புத்தகம் நன்கு பயன்படுமாறு இறைவன் அருளுவாராக.

பிரசுரகர்த்தர்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பள்ளிக்கூடம் | ... | 7 |
| 2. | கிழமை விதிகள் | ... | 9 |
| 3. | ரோஜாக் கிளை | ... | 10 |
| 4. | பழங்கள் | ... | 12 |
| 5. | சுவைகள் | ... | 14 |
| 6. | படம் சேர்த்துப் படித்தல் | ... | 15 |
| 7. | பிராணிகளின் ஒலிகள் | ... | 17 |
| 8. | பனைமரம் | ... | 19 |
| 9. | எறும்பு | ... | 22 |
| 10. | ஈ | ... | 24 |
| 11. | ஈயின் கதை | ... | 26 |
| 12. | மயில் | ... | 29 |
| 13. | பசு | ... | 31 |
| 14. | தலை மறைவு | ... | 34 |
| 15. | நமது உடல் | ... | 36 |
| 16. | நான்கு குருடர்கள் | ... | 38 |
| 17. | தொழிலாளர் | ... | 41 |
| 18. | நான் பெரியவனானல் (ஒரு நாடகம்) | ... | 44 |
| 19. | நிறங்கள் | ... | 46 |
| 20. | ஒலிக் குறிப்புச் சொற்கள் | ... | 48 |
| 21. | தீபாவளி | ... | 50 |
| 22. | கவனிப்பு இல்லாத சிறுவன் | ... | 54 |
| 23. | பேராசையின் பலன் | ... | 57 |
| 24. | கிளி | ... | 60 |


## செய்யுட் பாடம்



| | | | |
|---|---|---|---|
| 1. | உலகநீதி | ... | 63 |
| 2. | ஆத்திசூடி | ... | 64 |

லலிதா

# பாலர் தமிழ் வாசகம்

---:o:---

## இரண்டாம் புத்தகம்




## 1. பள்ளிக்கூடம்

1. இது எங்கள் பள்ளிக்கூடம்.
2. இதன் பெயர் ————————.
3. இதில்——உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள்.
4. நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.

5. என் வகுப்பில்——பிள்ளைகள் படிக்கிறார்கள்.
6. அவர்களில் ஆண்கள்——பேர்.
7. பெண்கள்——பேர்.
8. நாங்கள் பகலில் படிப்போம்.
9. நாங்கள் மாலையில் விளையாடுவோம்.
10. எங்கள் உபாத்தியாயரும் எங்களோடு விளையாடுவார்.
11. நாங்கள் தோட்டத்திலும் வேலை செய்வோம்.

## பயிற்சி

விடை சொல் :—

(1) இந்தப் பள்ளிக்கூடத்தில் எத்தனை அறைகள் இருக்கின்றன ?

(2) காலையில் பள்ளிக்கூடம் எப்பொழுது திறக்கும் ?

(3) மாலையில் எப்பொழுது மூடும் ?

(4) நீங்கள் என்ன என்ன விளையாடுவீர்கள் ?

(5) உன் வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு எப்படி வருவாய் ?

(6) உன் புத்தகங்களின் பெயர்கள் என்ன ?

# 2. கிழமை விதிகள்

ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம் இல்லை.
திங்கட்கிழமை தோட்ட வேலை.
செவ்வாய்க்கிழமை பந்தாட்டம்.
புதன்கிழமை கைத்தொழில்.
வியாழக்கிழமை ஊரைச் சுற்றிப் பார்த்தல்.
வெள்ளிக்கிழமை நாடகமும் பாட்டும்.
சனிக்கிழமை காலைப் பள்ளிக்கூடம்.

### பயிற்சி

விடை சொல் :—

(1) இன்று என்ன கிழமை ?
(2) நேற்று என்ன கிழமை ?
(3) நாளை என்ன கிழமை ?
(4) இன்று நீ என்ன என்ன செய்தாய் ?
(5) ஒரு வாரத்துக்கு எத்தனை கிழமைகள் ?
(6) என்று உனக்கு விடுமுறை ?
(7) உனக்கு என்ன கைத்தொழில் தெரியும் ?



## 3. ரோஜாக் கிளை

| | | | |
|---|---|---|---|
| ரோஜா | கிளை | அழகு | சீக்கிரம் |
| புஷ்பம் | இதழ் | வாசனை | மெல்லியது |
| மலர் | மாலை | பன்னீர் | உள்ளது |
| மொட்டு | மணம் | ஜரிகை | உதிர்ந்து |

ஜ ஷ

1. இது ரோஜாக் கிளை.
2. இதில் இலைகளும் புஷ்பங்களும் இருக்கின்றன.
3. ஒரு மொட்டு இருக்கிறது பார்.

4. மொட்டு மலர்ந்து பூ ஆகும்.
5. ரோஜாப்பூ நல்ல மணம் உடையது.
6. மலர்களால் மாலை கட்டலாம்.
7. ரோஜா மாலை மிக அழகானது.
8. ரோஜா மாலையில் ஜரிகை போடலாம்.
9. ரோஜாவிலிருந்து பன்னீர் எடுக்கலாம்.
10. பன்னீர் வாசனை உள்ளது.
11. ரோஜாவின் இதழ்கள் மெல்லியவை.
12. அவை சீக்கிரம் உதிர்ந்துவிடும்.

பயிற்சி

விடை சொல் :—

(1) உன் வீட்டுத் தோட்டத்தில் பூச்செடிகள் உண்டா ?

(2) தலையில் வைத்துக் கொள்ளக்கூடிய பூக்கள் யாவை ?

(3) ரோஜாப்பூ என்ன நிறம் ?

(4) ரோஜாச் செடியில் முட்கள் எங்கே இருக்கின்றன ?

(5) இந்த ஊரில் கிடைக்கும் பூக்கள் யாவை ?


(6) நீரில் பூக்கும் புஷ்பங்கள் யாவை ?

# 4. பழங்கள்

| | | |
|---|---|---|
| இனிப்பு | பலவகை | தாறு |
| தித்திப்பு | கொட்டை | முதலிய |
| சுளை | ஒவ்வொரு | ரஸம் |

ஸ க்ஷ

## மாம்பழம்




படத்தில் இருப்பவை மாம்பழங்கள்.

மாம்பழம் இனிப்பாய் இருக்கும்.

மாம்பழத்தில் பல வகைகள் உண்டு.

## பலாப்பழம்

பழங்களில் பெரியது பலாப்பழம்.




அது பலா மரத்தில் உண்டாகிறது.

ப்லாப் பழத்தின் மேலே முள்ளு முள்ளாய் இருக்கும்.

அதை அறுத்தால் உள்ளே தித்திப்பான சுளைகள் இருக்கும்.

ஒவ்வொரு சுளையிலும் ஒவ்வொரு கொட்டை உண்டு.

## வாழைப்பழம்



வாழைப்பழம் எப்பொழுதும் கிடைக்கும். வாழையில் பலவகை உண்டு.

வாழை தாறு தாருய்க் காய்க்கும்.

## வேறு பழங்கள்

இன்னும் நம் நாட்டில் வேறு பழங்களும் கிடைக்கும்.

மாதுளை, கிச்சிலி, திராக்ஷை, முதலிய பழங்களைப் பார்த்திருக்கிருயா?

பழ ரஸம் உடம்பிற்கு நல்லது.

### பயிற்சி

விடை சொல் :—

(1) நீ என்ன என்ன பழம் தின்றிருக்கிருய்?

(2) புளிப்பான பழங்கள் யாவை?

(3) மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் இவற்றை எப்படித் தின்னலாம்?

(4) மாங்காய், வாழைக்காய் இவற்றை என்ன செய்யலாம்?

(5) சுளையுள்ள பழங்கள் யாவை?

(6) தோல் உரிக்க முடியாத பழங்கள் யாவை?

(7) ரஸம் அதிகமுள்ள பழங்கள் யாவை?

---

# 5. சுவைகள்

| | | |
|---|---|---|
| சுவை | துவர்ப்பு | காரம் |
| கசப்பு | புளிப்பு | உவர்ப்பு |

1. சர்க்கரை தித்திக்கும்.
   பால் தித்திக்கும்.
2. வேப்பங்காய் கசக்கும்.
   பாகற்காய் கசக்கும்.
3. பாக்கு துவர்க்கும்.
   கடுக்காய் துவர்க்கும்.
4. எலுமிச்சம் பழம் புளிக்கும்.
   புளியம் பழம் புளிக்கும்.
5. மிளகாய் காரமானது.
   மிளகு காரமானது.
6. கடல் நீர் உவர்ப்பானது.
   உப்பு உவர்ப்பானது.

## பயிற்சி

விடை சொல் :—

1. காப்பியில் என்ன என்ன சேர்கின்றன ? ஒவ்வொன்றின் சுவை யாது ?
2. இன்று பகலில் நீ எவற்றை உண்டாய் ? ஒவ்வொன்றின் சுவை யாது ?
3. பழங்களில் இனிப்பானவை எவை ?

# 6. படம் சேர்த்துப் படித்தல்


| | | | |
|---|---|---|---|
| பிராணி | முட்டை | சுமக்கும் | கோபம் |
| மிருகம் | காப்பாற்றும் | அடைகாத்து | தழை |
| குஞ்சு | மேயும் | பொரிக்கும் | பண்டம் |




வீட்டில் வளரும் பிராணி.
வீடுகாக்கும்.
அறிவுள்ள பிராணி.



மிகவும் சாதுவான பிராணி.
பால் குடிக்கும்.
எலி பிடிக்கும்.




முட்டை இடும்.
அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.
தன் குஞ்சுகளைக் காப்பாற்றும்.




தண்ணீரில் நீந்தும்.
முட்டை இடும்.
அடைகாப்பது இல்லை.




மிகவும் சாதுவான பிராணி.
பால் கொடுக்கும்.
புல் மேயும்.
தன் கன்றைக் காப்பாற்றும்.




மிகவும் பொறுமையுள்ள பிராணி.
துணி மூட்டை சுமக்கும்.
குதிரைக் குட்டிபோல் இருக்கும்.



புல் மேயும்.
வீடுகளில் வளரும்.
மிகவும் பயம் உடையது.
புல் தழைகளைத் தின்னும்.



காட்டில் வாழும்.
மிகவும் வேகமாய் ஓடும்.
புல் மேயும்.



வீட்டிலும் கொல்லையிலும் வசிக்கும்.
மிகவும் சிறிய பிராணி.
தின் பண்டங்களைத் திருடித் தின்னும்.

## பயிற்சி

**1. விடை சொல் :—**

1. உன் வீட்டில் நீ வளர்க்கும் பிராணிகள் யாவை?
2. எவை பால் கொடுக்கும் ?
3. எவை வண்டி இழுக்கும் ?
4. துஷ்டப் பிராணிகள் சிலவற்றின் பெயரைச் சொல்லு.
5. எலிகளை எப்படித் தொலைக்கலாம் ?

**2. விடை எழுது :—**

1. உனக்குத் தெரிந்த பறவைகளின் பெயர்களை எழுது.
2. பூனை எப்பொழுது எலி பிடிக்கும் ?

---

# 7. பிராணிகளின் ஒலிகள்

| | | | |
|---|---|---|---|
| குரைக்கும் | கனைக்கும் | பிளிறும் | கூவும் |
| சீறும் | ஊளையிடும் | கர்ஜிக்கும் | அகவும் |
| முக்காரம் | உறுமும் | கீச்சிடும் | அலறும் |

1. நாய் குரைக்கும்.
2. பூனை சீறும்.
3. பசு கதறும்.
4. எருது முக்காரம் போடும்.
5. ஆடு கத்தும்.
6. கழுதை கத்தும்.
7. குதிரை கனைக்கும்.
8. நரி ஊளையிடும்.
9. பன்றி உறுமும்.
10. புலி உறுமும்.
11. யானை பிளிறும்.
12. சிங்கம் கர்ஜிக்கும்.
13. எலி கீச்சிடும்.
14. கோழி கூவும்.
15. காக்கை கரையும்.
16. மயில் அகவும்.
17. குயில் கூவும்.
18. கிளி கொஞ்சும்.
19. மைனா கீச்சிடும்.
20. புறா கூவும்.
21. ஆந்தை அலறும்.
22. வண்டு பாடும்.
23. தேனீ இரையும்.
24. கோட்டான் குமுறும்.
25. பாம்பு சீறும்.
26. தவளை கத்தும்.
27. மனிதன் பேசுவான்.

## பயிற்சி

**1. விடை சொல் :—**

(1) நாய் எப்பொழுது வாலை ஆட்டும் ?

(2) நீ பிராணிகளைப்போல் கத்திக் காட்டு.

(3) காலையில் எந்த எந்தப் பறவைகள் சத்தமிடும் ?

(4) இரவில் எவை வெளிவரும் ?

(5) உன் ஊரில் காணும் பறவைகள் யாவை ?

(6) காட்டில் வசிக்கும் மிருகங்கள் யாவை ?

(7) வீட்டில் வளர்க்கும் பறவைகள் யாவை ?

(8) பாம்பு எங்கே வாழும் ?

**2. கோடிட்ட இடங்களை நிரப்பு :—**

நரி ————.

——— குரைக்கும்.

யானை ————.

——— கர்ஜிக்கும்.

மனிதன் ————.

———— அழும்.

**3. எழுது :—**

சிங்கம் கர்ஜிக்கும்



## 8. பனைமரம்

| | | |
|---|---|---|
| நாட்டார் | கோடை | முடைய |
| தோப்பு | நுங்கு | மட்டம் |
| சித்திரை | ஓலை | உறி |

1. பனைமரமே! பனைமரமே!
ஏன் வளர்ந்தாய்! பனைமரமே!
நான் வளர்ந்த காரியத்தை
நாட்டாரே! சொல்லுகிறேன்.

2. படுக்கப்பாய் நானாவேன்;
பாய் முடையத் தோப்பாவேன்;
பட்டு விடும் பயிர்களுக்குப்
பலத்த ஏற்றம் நானாவேன்.

3. மட்டமுள்ள உறியாவேன்;
மாடுகட்டத் தும்பாவேன்;
நனைந்து வரும் பேர்களுக்கு
நல்ல குடை நானுவேன்.

4. சித்திரைக் கோடையிலே
சிறந்த நுங்கு நானுவேன்.
புத்தகமும் நானுவேன் ;
புதுவிசிறி நானுவேன்:
கலியாண வாசலுக்குக்
கட்டோலை நானுவேன்.

### பயிற்சி

**1. விடை சொல் :—**

(1) உன் ஊரிலே பனைமரங்கள் எங்கே இருக்கின்றன ?

(2) பனங்காயில் நுங்கு எங்கே இருக்கும் ?

(3) பனைமரத்தில் ஏற முடியுமா ?

**2. விடை எழுது :—**

(1) கிளைகள் இல்லாத மரங்கள் யாவை ?

(2) பனை ஓலையால் என்ன என்ன செய்யலாம் ?

(3) நுங்கு எப்பொழுது அகப்படும் ?

(4) பனையைப்போல உள்ள வேறு மரங்கள் யாவை ?


### 3. ஒரு பனை—பல பனைகள்

இந்த மாதிரி பின்வரும் சொற்களுக்குப் பலவற்றைக் காட்டும் சொற்களை எழுது :—

| ஒரு | பல |
|---|---|
| மரம் | ........................ |
| கிளை | ........................ |
| ஓலை | ........................ |
| பாய் | ........................ |
| நுங்கு | ........................ |
| கொத்து | ........................ |

### 4. எழுது:—

பனைமரம் மிகவும் உயரமானது.



# 9. எறும்பு

| | | |
|---|---|---|
| ஊர்ந்து | வளை | தீனி |
| உழைத்து | வகை | சோம்பல் |
| வாழும் | ஒற்றுமை | அவற்றுள் |
| கடுக்கும் | சுறுசுறுப்பு | அவைகளுக்குள் |

1. எறும்பு ஒரு சிறிய பிராணி. அது தரையில் ஊர்ந்து செல்லும். அது சுவர்களிலும் தரையிலும் வளைசெய்துகொண்டு அவற்றில் வசிக்கும்.

2. எறும்புகளில் அநேக வகைகள் உண்டு. அவற்றுள் சில கொடியவை. அவை கடித்தால் கடுக்கும்.

3. எறும்புகள் கூட்டம் கூட்டமாக வாழும். அவைகளுக்குள் ஒற்றுமை அதிகம்.

4. எறும்புகள் சுறுசுறுப்பானவை. அவை எப்பொழுதும் உழைத்துக்கொண்டிருக்கும். அவை பாடுபட்டுத் தீனிகளைச் சேர்க்கும்.

5. எறும்புகளுக்குச் சோம்பல் இல்லை.

## பயிற்சி.

**1. விடை சொல் :—**

(1) ஓர் எறும்பு வரிசையைக் கவனி. அவை என்ன செய்கின்றன ?

(2) எறும்பைப்போல் ஊர்ந்து செல்லும் வேறு பிராணிகள் யாவை ?

(3) நெய், மோர் முதலியவற்றை எறும்பு வராமல் காப்பது எப்படி ?

**2. விடை எழுது :—**

(1) எறும்பு வகைகளில் சிலவற்றின் பெயர்களை எழுது.

(2) பூமிக்குள் வளை தோண்டி வாழும் பிராணிகள் யாவை ?

(3) உன் வீட்டில் எறும்பு செய்யும் தொல்லைகள் யாவை ?

**3. கீழே கண்ட சொற்களில் சரியானவற்றைப் பொறுக்கிக் கோடிட்ட இடங்களில் அமை :—**

**வளையில் பொந்தில் மரக்கிளையில் குகையில் காட்டில்**

(1) சிங்கம்——வாழும்.

(2) பாம்பு——வசிக்கும்.


(3) எலி ——நுழையும்.

(4) கரடி ——வசிக்கும்.

(5) பறவை——தங்கும்.

**4. எழுது :—**

எறும்பைப்போல் சுறுசுறுப்பாய் இரு.



# 10. ஈ

இனம் ஏராளமாய் மேற்புறம் சாணம்
வெப்பம் அசுத்தமான பொரிந்து கொள்ளை நோய்

1. ஈ பூச்சிகளின் இனத்தைச் சேர்ந்தது.
2. அதை நம் வீடுகளில் ஏராளமாய்க் காணலாம்.
3. அதன் தலை மிகவும் சிறியது.
4. அதன் உடல் சிறுத்து நீண்டிருக்கும்.
5. தலையில் இரண்டு கண்கள் உண்டு; அவை சிவப்பாய் இருக்கும்.
6. உடலின் மேற்புறத்தில் இரண்டு இறக்கைகள் உண்டு.
7. அதற்கு ஆறு கால்கள் உண்டு.
8. ஈயின் வயிறு வளையம் வளையமாய் இருக்கும்.
9. அது சாணத்திலும் குப்பையிலும் முட்டை இடும்.
10. முட்டைகள் சூரிய வெப்பத்தால் பொரிந்து குஞ்சாகும்.

11. **ஈயின் காலில் மெல்லிய மயிர்கள் உண்டு.**

12. **இவைகளில் அசுத்தமான பொருள்கள் ஒட்டிக் கொள்ளுகின்றன.**

13. **ஆகையினுல் ஈக்கள் நோய்களைப் பரவச் செய்கின்றன.**

14. **அநேகர் கொள்ளை நோய்களால் இறப்பதற்கு ஈக்களே காரணம்.**

## பயிற்சி

**1.** விடை சொல் :—

(1) உன் வீட்டில் இருக்கும் பூச்சிகள் யாவை?

(2) அவை உனக்குச் செய்யும் தீமைகள் என்ன?

(3) நாம் ஏன் கொசுகு வலை உபயோகிக்கிறோம்?

**2.** விடை எழுது:—

(1) ஈ எங்கே முட்டை யிடும்?

(2) ஈயின் இறக்கைகள் அதன் உடலில் எங்கே இருக்கின்றன?

(3) ஈக்கள் எப்படி நோய்களைப் பரப்புகின்றன?

**3.** பின்வரும் சொற்களைக் கொண்டு கோடுகளை நிரப்பு :—

சிறியது பெரியது நீண்டது வட்டமானது

(1) யானையின் உடல் ————


(2) குரங்கின் வால் ————

(3) ஈயின் தலை ————

(4) ஈயின் கண் ————

**4.** எழுது:—

ஈக்கு விடம் தலையில்



## 11. ஈயின் கதை

| | | |
|---|---|---|
| மற | ஆகிய | வலையன் |
| மேய்க்கிற | பண்ணு | இடையன் |

1. ஓர் ஈ தன் பெயரை மறந்து விட்டது. அது ஒவ்வொருவரிடமும் போய், "என் பெயர் என்ன?" என்று கேட்டது.

2. முதலில் அது ஒரு கன்றுக்குட்டியிடம் போயிற்று. பிறகு அது மாடு, இடையன், அவன் கையில் இருந்த குச்சி, மரம், கொக்கு, குளம், மீன், வலையன், சட்டி, மண், புல் ஆகிய இவற்றினிடமெல்லாம் சென்று, "என் பெயர் என்ன?" என்று கேட்டது. ஒருவரும் சரியாக அதன் பெயரைச் சொல்லவில்லை.

3. ஒரு குதிரை புல் மேய்ந்துகொண்டிருந்தது. கடைசியாய், ஈ அந்தக் குதிரையினிடம் போய்,

“குழகுழ கன்றே,
கன்றின் தாயே,
தாய் மேய்க்கிற இடையா,
இடையன் கைக் கோலே,
கோல் வளரும் கொடி மரமே,
மரத்தின் மேலிருக்கும் கொக்கே,
கொக்கு விளையாடும் குளமே,
குளத்தில் இருக்கும் மீனே,
மீன் பிடிக்கும் வலையா,
வலையன் கைச் சட்டியே,
சட்டி பண்ணுகிற குயவா,
குயவன் எடுக்கிற மண்ணே,
மண் மேல் இருக்கிற புல்லே,
புல்லை மேய்கிற குதிரையே,
என் பெயர் என்ன?”

என்று கேட்டது.

4. அதைக் கேட்டுக் குதிரை, “ஈ ஈ ஈ......” என்று கனைத்தது.

5. ஈ உடனே, “ஆமாம்; ஆமாம்; என் பெயர் ஈ” என்று சொல்லிக்கொண்டே பறந்து போய்விட்டது.

## பயிற்சி

**1.** விடை சொல் :—

(1) உன் வீட்டிலுள்ள மாடு, கன்று, பூனை, நாய் இவற்றிற்கு நீ வைத்த பெயர்களைச் சொல்லு.

(2) உன் வீட்டிலுள்ளவர்களின் பெயரையும் உறவையும் சொல்லு.

(3) குதிரை எப்படிக் கனைக்கும்? நாய் எப்படிக் குரைக்கும்? மாடு எப்படிக் கதறும்?

(4) ஈ யாரிடமெல்லாம் போயிற்று?

(5) குதிரையிடம் போய் ஈ எப்படிப் பாடிற்று?

**2** விடை எழுது :—

(1) ஈ யார் யாரைப் போய்த் தன் பெயரைக் கேட்டது? அதை வரிசையாய்ச் சொல்.

(2) குயவன் எதனால் சட்டி பண்ணுகிறான்?

(3) வலையன் கையில் சட்டி ஏன் இருக்கிறது?

**3.** கோடுகளை நிரப்பு :—


(1) ஈ பறக்கிறது. ஈக்கள்———

(2) மாடு மேய்கிறது. மாடுகள்———

(3) கொக்கு விளையாடுகிறது. கொக்குகள்———

**4.** எழுது :—

உன் பெயர் என்ன?



## 12. மயில்

| | | |
|---|---|---|
| கொண்டை | ஆண் | உற்சாகம் |
| தோகை | மருந்து | தானியம் |

1. மயில் பறவைகளின் இனத்தைச் சேர்ந்தது.
2. அது பெரிய பறவைகளில் ஒன்று.
3. அதன் தலை சிறியது.
4. அது பறவைகளுக்குள் மிகவும் அழகானது.
5. அதன் தலையில் சிறிய கொண்டை உண்டு.
6. ஆண் மயிலுக்கு நீண்ட வால் உண்டு.
7. அதைத் தோகை என்பார்கள்.
8. தோகையில் பல நிறங்கள் உண்டு.
9. மயிலின் தோகை மருந்து செய்ய உதவும்.

10. மயிலுக்கு உற்சாகம் உண்டாகும்போது தோகையை விரித்து ஆடும்.

11. அதற்கு உறுதியான இரண்டு இறக்கைகள் உண்டு.

12. மயில் தானிய வகைகளைத் தின்னும்.

## பயிற்சி

1. விடை சொல் :—

   (1) வீட்டில் வளரும் பறவைகள் யாவை ?

   (2) கோழியால் உயரப் பறக்க முடியுமா ? ஏன் ?

   (3) மயில் எந்தக் கடவுளுக்கு வாகனம் ?

2. விடை எழுது :—

   (1) ஆண் கோழி, பெண் கோழி—இவற்றின் பெயர்கள் யாவை ?

   (2) மயில் தோகையால் என்ன உபயோகம் ?

   (3) மயில் எப்பொழுது தன் தோகையை விரித்து ஆடும் ?

3. பின்வரும் வாக்கியங்களில் சொற்கள் இடம் மாறி இருக்கின்றன. அவற்றைச் சரியாக அமை :—


   (1) இனத்தை மயில் சேர்ந்தது பறவை.

   (2) உண்டு நீண்ட ஆண் வால் மயிலுக்கு.

   (3) வகைகளை தானிய தின்னும் மயில்.

4. எழுது :—

மயிலுக்கும் பாம்புக்கும் பகை.



## 13. பசு

| | | | |
|---|---|---|---|
| சாதுவான | பருத்து | முதலியவை | அருமை |
| ஆகையால் | அடர்த்தி | குளம்பு | வலு |
| வெண்ணெய் | உறுதியான | சுகம் | துன்பம் |

1. இதோ! இந்தப் படத்தைப் பார். இது பசுவின் படம். பசு மிகவும் சாதுவான பிராணி. அது நமது வீடுகளில் வளருகிறது. ஆகையால் அதை வீட்டு மிருகம் என்பார்கள்.

2. பசுவின் உடல் பருத்து இருக்கும். அதன் தோல் மிகவும் தடிப்பானது. அதன்மேல் மயிர் அடர்த்தியாய் முளைத்திருக்கும்.

3. பசுவுக்கு நான்கு கால்கள் உண்டு. அவை உறுதியாயும், குள்ளமாயும் இருக்கும். கால்களின் அடியில் குளம்புகள் உண்டு. குளம்புகள் இரண்டு பிளவாய் இருக்கும். பசுவின் தலையில் இரண்டு

கொம்புகள் உண்டு. அவை பசுவுக்கு அழகைத் தருகின்றன.

4. பசு நமக்குப் பால் கொடுக்கிறது. பசுக்கள் எந்த நிறமாயினும் எல்லாப் பசுக்களின் பாலும் வெண்மையாகவே இருக்கும். பசுவின் பால் நமக்கு நன்மையைக் கொடுக்கிறது.

5. பசுவின் பால் தித்திப்பானது. அதிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், பாலடைக் கட்டி முதலியவைகளைச் செய்து கொள்ளுகிறோம். இவையெல்லாம் நமக்கு ஆகாரம் ஆகின்றன.

6. பசுவின் நெய் மிகவும் அருமையானது. அது நமது தேகத்துக்கு வலுவைத் தருகிறது. நாம் உண்ணும் பருப்புக்குப் பசுவின் நெய் நல்லது.

7. நீ பசுவுக்குத் துன்பம் செய்தால் அது உன்னை முட்டும்.

### பயிற்சி

1. விடை சொல்:—

(1) கொம்புகளுள்ள சில பிராணிகளின் பெயர்களைச் சொல்லு.

(2) மாட்டுக்குத் தீனி என்ன?

(3) பாலிலிருந்து வெண்ணெய் எப்படி எடுக்கிறார்கள்.

**2.** **விடை எழுது:—**

(1) பசுவின் குளம்புகள் எப்படி இருக்கின்றன ?

(2) பாலிலிருந்து என்ன என்ன செய்யலாம் ?

(3) கொம்பினால் பசுவுக்கு என்ன உபயோகம் ?

**3.** **பின்வரும் ஒவ்வொருவரையும் பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுது:—**

**உதாரணம் :**—இடையன்—மாடு மேய்ப்பான்.

(1) தச்சன் ..............................

(2) கொத்தன் ..............................

(3) உழவன் ..............................

(4) வலைஞன் ..............................

(5) வண்ணான் ..............................

**4.** **எழுது:—**

பசுவின் நிறம் பலவானாலும் பாலின் நிறம் ஒன்றே.



# 14. தலை மறைவு

| | | |
|---|---|---|
| வேலையாள் | பிரபு | ஓர் |
| குறும்பு | கட்டளை | வணங்கினான் |
| கோபித்து | கவிழ்த்து | மன்னித்து |

1. ஒரூரில் ஓர் அரசன் இருந்தான். அவனிடம் ஒரு வேலையாள் இருந்தான். அவன் பெயர் தெனாலிராமன்.

2. தெனாலிராமன் பல குறும்புகளைச் செய்து வந்தான். அரசன் ஒரு நாள் அவனைக் கோபித்து,

"இராமா, நீ இனிமேல் தலைமறைவாய் இருக்கவேண்டும். உன் தலையைக் கண்டால் வெட்டிப் போடுவேன்" என்றான். தெனாலிராமன் போய் விட்டான்.

3. மறு நாள் அவன் ஒரு பெரிய பானையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டான். அதோடு அவன் அரசன் முன்னே போய் நின்று வணங்கினான். "நீ யார்"? என்றான் அரசன். "நான் தெனாலிராமன், பிரபுவே" என்று அவன் பானைக்குள் இருந்து பேசினான்.

4. அரசன், "ஏன் இப்படி வந்தாய்?" என்று கேட்டான். அதற்கு அவன், "அரசரே, என்னைத் தலை மறைவாய் இருக்கக் கட்டளை யிட்டீர்களே!" என்று சொல்லி வணங்கினான்.

5. அரசனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவன் தெனாலிராமனை மன்னித்து, முன்போல் வேலையில் வைத்துக் கொண்டான்.

### பயிற்சி

1. இந்தக் கதையை நடித்துக் காட்டுங்கள்.
2. விடை எழுது :—
   (1) அரசன் ஏன் கோபித்தான்?
   (2) தெனாலிராமன் எப்படித் தலைமறைவாய் வந்தான்?
   (3) அரசன் ஏன் அவனை மன்னித்தான்?
3. கோடிட்ட இடங்களை நிரப்பு :—
   (1) வேலையாள் இருந்தான். ——— இருந்தார்கள்.
   (2) மனிதன் பேசினான். ——— பேசினார்கள்.
   (3) அரசன் சிரித்தான். ——— சிரித்தார்கள்.
4. எழுது :—

   குறும்பு செய்பவன் கஷ்டம் அடைவான்.

# 15. நமது உடல்

| | | | |
|---|---|---|---|
| தேகம் | அங்கம் | பார்வை | பொக்கை |
| உறுப்பு | முகம் | குருடன் | மூளி |
| உச்சி | முடவன் | செவிடன் | பித்தன் |
| உள்ளங்கால் | ஊமை | மூக்கறையன் | |

1. நமது உச்சி முதல் உள்ளங்கால் வரையில் உள்ள பாகம் தேகம் எனப்படும். கடவுள் நமக்குத் தேகத்தைக் கொடுத்திருக்கிறுர்.



2. தேகத்தில் பல உறுப்புக்கள் உண்டு. அவை கண், காது, மூக்கு, வாய், பல், நாக்கு, கை, கால் என்பவைகளாகும்.

3. நாம் கண்களினுல் பார்க்கிறோம். காதுகளினுல் கேட்கிறோம். மூக்கினுல் முகருகிறோம். வாயினுல் பேசுகிறோம்; உண்கிறோம். பல்லினுல் கடிக்கிறோம். நாவினுல் ருசி பார்க்கிறோம். கைகளினுல் வேலே செய்கிறோம். கால்களினுல் நடக்கிறோம். இப்படியே ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வொரு வேலையைச் செய்கிறது. எந்த உறுப்பாவது இல்லாதவன் அங்கம் குறைந்தவன்.

4. கண் பார்வை இல்லாதவன் குருடன். காதினுல் கேட்க முடியாதவன் செவிடன். வாயினுல் பேச மாட்டாதவன் ஊமை. கால்களினுல் நடக்க

மாட்டாதவன் முடவன். மூக்கு அறுந்தவன் மூக்கறையன். பல் இல்லாதவன் பொக்கை வாயன். காதுகள் அறுந்தவன் மூளி.

5. குள்ளமாய் இருப்பவன் குள்ளன். அறிவு இல்லாதவன் மூடன். புத்தி சரியாய் இல்லாதவன் பித்தன்.

### பயிற்சி

1. விடை சொல் :—

(1) நமக்கு இல்லாத உடல் உறுப்புக்கள் மாட்டுக்கு என்ன என்ன உண்டு?

(2) கைகால்களின் பகுதிகளுக்குப் பெயர்கள் என்ன?

(3) உடலுக்குள் இருக்கும் பகுதிகளில் உனக்குத் தெரிந்தவற்றின் பெயர்களைச் சொல்லு.

2. விடை எழுது :—

(1) கழுத்துக்குமேல் உள்ள உறுப்புக்களின் பெயர்களை எழுது.

(2) வாய், கண், மூக்கு, செவி இவற்றால் நாம் என்ன என்ன செய்கிறோம்?

(3) இரட்டையாய் இருக்கும் உறுப்புக்கள் யாவை?

3. கோடிட்ட இடங்களில் உரிய சொற்களை அமை :—


(1) நாம் ——— எடுக்கிறோம்.

(2) நாம் ——— ஓடுகிறோம்.

(3) நாம் ——— கேட்கிறோம்.

4. எழுது :—

எண்சாண் உடலுக்குள் தலையே சிறந்தது.



## 16. நான்கு குருடர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| வரவழை | அருகில் | பிடித்து | உருவி | உரல் |
| நகை | தொட்டு | தடவி | உலக்கை | பீப்பாய் |

1. ஓர் ஊரில் நான்கு குருடர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு யானையைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை இருந்தது. அவர்கள் ஒரு யானைக்காரனை வரவழைத்தார்கள். அவன் தன் யானையைக் கொண்டுவந்தான்.

2. குருடர்கள் யானையின் அருகில் போய் அதைத் தடவிப் பார்த்தார்கள். ஒருவன் துதிக்கையைத் தொட்டுப் பார்த்தான்; ஒருவன் காலைப்

பிடித்துப் பார்த்தான் ; ஒருவன் உடலைத் தடவிப் பார்த்தான்; ஒருவன் வாலை உருவிப் பார்த்தான். இப்படி அவர்கள் யானையைத் தொட்டுப் பார்த்து விட்டு யானைக்காரனைப் போகச் சொன்னார்கள்.

3. பிறகு அவர்கள் ஓரிடத்தில் கூடினார்கள். துதிக்கையைப் பார்த்தவன், "யானை உலக்கை போல் இருக்கிறது" என்றான். காலைப்பார்த்தவன் "உரல்போல் இருக்கிறது" என்றான். உடலைப் பார்த்தவன், "யானை என்பது பீப்பாய்" என்றான். வாலை உருவினவன் "இல்லை; யானை என்பது துடைப்பம்" என்றான்.

4. அவர்கள் பேசியவற்றைக் கேட்டு அருகில் இருந்தவர்கள் நகைத்தார்கள்.

### பயிற்சி

**1.** விடை சொல் :—

(1) யானையின் துதிக்கை எங்கே இருக்கும்? அதன் உபயோகம் என்ன?

(2) இந்தக் கதையை நடித்துக் காட்டு.

**2.** விடை எழுது :—

(1) யானைக்குத் தந்தம் எங்கே இருக்கும்?

(2) குருடர்கள் ஒவ்வொருவரும் என்ன என்ன சொன்னார்கள்?

(3) யானை எங்கே வசிக்கும்?

**3. பின்வரும் சொற்களை கீழ்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் தகுந்தவாறு அமை.**

தவிடு நொய் கொள் கரும்பு

(1) குதிரை——தின்னும்


(2) மாடு——தின்னும்

(3) கோழி——தின்னும்

(4) யானை——தின்னும்.

**4. எழுது:—**

ஒரே கடவுளைப் பலவாறு நினைக்கிறார்கள்.



## 17. தொழிலாளர்

| | | |
|---|---|---|
| தச்சன் | வண்ணுன் | அரிவாள் |
| கருமான் | செம்படவன் | கலங்கள் |
| கொல்லன் | வாணியன் | முதலியவை |
| குயவன் | சேணியன் | கடுக்கன் |
| தட்டான் | வேட்டை | தண்டை |
| கன்னுன் | செருப்பு | கொலுசு |

1. மரவேலை செய்கிறவன் தச்சன். இவன் மேஜை, நாற்காலி, பெட்டி முதலியவைகளைச் செய்வான்.

2. இரும்புவேலை செய்கிறவன் கருமான். இவனுக்குக் கொல்லன் என்றும் பெயர் உண்டு. இவன் கத்தி, அரிவாள் முதலியவைகளைச் செய்வான்.

3. மண் கலங்கள் செய்பவன் குயவன். இவன் சட்டி, பானை முதலியவைகளைச் செய்வான்.

4. நகைகள் செய்கிறவன் தட்டான். இவனுக்குப் பொற் கொல்லன் என்று பெயர். இவன் கடுக்கன், காப்பு, தண்டை, கொலுசு முதலியவைகளைச் செய்வான்.

5. வெண்கலச் சாமான் செய்கிறவன் கன்னான். இவன் செம்பு முதலியவைகளைச் செய்வான். துணி நெசவு செய்பவன் சேணியன். இவன் புடவை, வேஷ்டி முதலியவைகளை நெய்வான்.

6. இன்னும் பல தொழிலாளிகள் இருக்கிறார்கள். துணிகளை வெளுப்பவன் வண்ணான். இவன் உடுப்புகளைச் சுத்தம் செய்வான். மீன் பிடிக்கிறவன் செம்படவன். எண்ணெயைச் செக்கில் ஆட்டி எடுப்பவன் வாணியன்.

### பயிற்சி

1. விடைசொல் :—

(1) குயவன் எப்படிச் சட்டிபானைகள் வனைவான்?

(2) உன் வீட்டிலுள்ள பாத்திரங்களின் பெயர்களைச் சொல்லு.

(3) உன் கிராமத்தில் எந்த எந்தத் தொழிலாளிகள் இருக்கிறார்கள்?

**2. விடை எழுது:—**

(1) படத்தில் காணப்படும் பொருள்களின் பெயர்களை எழுது.

(2) தட்டான் செய்யும் நகைகள் சிலவற்றின் பெயர்களை எழுது.

(3) நம் வகுப்பிலுள்ள பையன்களின் பெற்றோர்களின் தொழில்கள் யாவை?

**3. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமை :—**

சட்டியை———————பண்ணலாம்.

பெட்டியை—————செய்யலாம்.

துணியை————நெய்யலாம்.


காப்பை ————செய்யலாம்.

கத்தியை————செய்யலாம்.

**4. எழுது :—**

தன் கையே தனக்குதவி.

———



## 18. நான் பெரியவனானால்

(ஒரு நாடகம்)

| | | | |
|---|---|---|---|
| குடியானவன் | பரம்படித்து | மளிகை | நியாயமாய் |
| உபாத்தியாயன் | நாற்றுப் பறித்து | ஜவுளி | அன்பாய் |
| மரியாதை | குவிப்பேன் | வியாபாரம் | பருத்தி |

மணியன் :—நான் பெரியவனானால் ஒரு குடியானவன் ஆவேன். நான் வயலை உழுது, பரம் படித்து, விதை தெளித்து, நாற்றுப்பறித்து, நட்டு, களை பிடுங்கி, அறுத்து, நெல்லைக் குவிப்பேன்.

குமரன் :—நான் பெரியவனானால், தோட்டத்தை உழுது, கறிகாய், சோளம், பருத்தி, இவைகளைப் போட்டு வளர்த்து விற்பேன்.

**முருகன் :—நான் பெரியவனுனல் கடை வைப்பேன். மளிகைச் சாமான், ஜவுளி இவற்றை விற்பேன். நியாயமாய் வியாபாரம் செய்து பணக்காரன் ஆவேன்.**

**விநாயகன்:—நான் பெரியவனுனல் உபாத்தியாயன் ஆவேன். மாணுக்கர்களுக்கு அன்பாய்ப் பாடம் கற்பிப்பேன். ஊரார் என்னிடம் மரியாதையாய் இருப்பார்கள்.**

## பயிற்சி

**1.** விடை சொல் :—

(1) இதை நடித்துக் காட்டுங்கள்.

(2) நீ பெரியவனுனல் என்ன செய்வாய்?

**2.** விடை எழுது :—

(1) குடியானவன் எப்படிச் சாகுபடி செய்வான்?

(2) உங்கள் ஊரில் கிடைக்கும் காய்கறிகள் யாவை ?

(3) மளிகைக் கடையில் என்ன என்ன விற்கும் ?

**3.** கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது :—

புடவை ——— கடையில் விற்கும்.

பச்சைமிளகாய் ——— கடையில் விற்கும்.

மல்லிகைப் பூ ——— கடையில் விற்கும்.

புளி ——— கடையில் விற்கும்.

இட்டலி ——— கடையில் விற்கும்.

**4.** எழுது :—

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.

———

# 19. நிறங்கள்

| | | |
|---|---|---|
| வெள்ளை | மஞ்சள் | ஊதா |
| கறுப்பு | வர்ணம் | குளிர்ச்சி |
| பச்சை | பஞ்ச | துக்கம் |
| சிவப்பு | கிச்சிலி | அடையாளம் |

1. பால் வெள்ளை நிறம் உடையது. காக்கை கறுப்பு நிறம் உடையது. இலைகள் பச்சை நிறம் உடையவை. இரத்தம் சிவப்பு நிறம் உடையது. பொன் மஞ்சள் நிறம் உடையது.

2. வெள்ளை, கறுப்பு, பச்சை, சிவப்பு, மஞ்சள் இவை ஐந்தும் முக்கியமான நிறங்கள். இவைகளுக்குப் பஞ்ச வர்ணம் என்று பெயர்.

3. நிறங்கள் பொருள்களுக்கு அழகைக் கொடுக்கின்றன. கண்களுக்குப் பச்சை குளிர்ச்சி தரும். அது நமக்கு மிக்க இன்பமானது. கறுப்பு நிறம் துக்கத்திற்கு அடையாளம்.

4. மனிதர் பொருள்களுக்கு நிறம் பூசி அழகு பெறச் செய்கிறார்கள். மோட்டார் வண்டிகள் எத்தனை நிறங்களாக இருக்கின்றன பார்!

பயிற்சி

1. விடை சொல் :—

(1) தோட்டத்திலுள்ள பூக்களின் பெயர்களையும் அவற்றின் நிறங்களையும் சொல்லு.

(2) புடவைகளில் என்ன என்ன நிறம் உண்டு?

(3) வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு இவற்றின் நிறங்கள் என்ன? இவற்றைச் சேர்த்துக் கடித்தால் என்ன நிறமாகும்?

**2.** விடை எழுது:—

(1) பஞ்சவர்ணங்கள் யாவை?

(2) கண்களுக்குக் குளிர்ச்சி தரும் நிறம் எது?

(3) கறுப்பு எதைக் காட்டும்?

**3.** கோடிட்ட இடங்களில் பின்வரும் சொற்களை ஏற்றவாறு அமை:—

பச்சை சிவப்பு மஞ்சள் நீலம்

(1) மாம்பழம் —— நிறம்.

(2) நாவல் பழம் —— நிறம்.

(3) கிளி —— நிறம்.

(4) எலுமிச்சை —— நிறம்.

**4.** எழுது:—

வெளுத்த தெல்லாம் பால் அல்ல.

## 20. ஒலிக்குறிப்புச் சொற்கள்

| | |
|---|---|
| உலைநீர் | சப்தி |
| முறி | கொதி |

1. மரம் மளமள வென்று முறிந்தது.
2. ரூபாய் கலீரென்று சப்திக்கிறது.
3. கண்ணாடி பட்டென்று வெடித்தது.
4. சிறுவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.
5. என் காலில் ஊசி சரேரென்று ஏறிற்று.
6. புருக்கள் பொள்ளென்று பறந்து போயின.
7. என் காது கும்மென்று அடைக்கிறது.
8. வண்டி கடகடவென்று ஓடுகிறது.
9. உலைநீர் தளதளவென்று கொதிக்கிறது.
10. அவன் சளசளவென்று நீரை ஊற்றினான்.
11. நெருப்பு திகுதிகு வென்று எரிகிறது.
12. சிறுவன் திடுதிடு வென்று ஓடினான்.
13. கிழவன் குடுகுடு வென்று நடந்து வந்தான்.
14. பையன் நறநற வென்று பல்லைக் கடித்தான்.
15. அர்ச்சுனன் படபட வென்று பேசினான்.
16. நீ மடமட வென்று உன் வேலையைச் செய்.
17. அவன் சிடுசிடென்று பேசினான்.
18. என் தலை கிறுகிறென்று சுற்றுகிறது.
19. மணி கணீர் கணீரென்று அடிக்கிறது.

20. அவன்பறபறவென்றுபையனை இழுத்தான்.
21. கிளி கிச்சுக் கிச்சென்று கத்திற்று.
22. இந்தப் பழம் கொளகொள வென்று இருக்கிறது.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஒலிக்குறிப்புச் சொற்களை எழுது:—

இருட்டு———என்று இருந்தது.

வாசனை———என்று வீசிற்று.

மழை———என்று பொழிந்தது.

கல்லை———என்று வீசினன்.

துணி———என்று கிழிந்தது.

தோசையை———என்று குத்தினள்.



## 21. தீபாவளி

| | | |
|---|---|---|
| உடை | படாசு | கொளுத்து |
| சொக்காய் | வாணம் | துன்பப்படுத்து |
| ஆடை | மத்தாப்பூ | சந்திக்கிருன் |
| முந்தின | பூத்திரி | அரக்கன் |
| அரை | தின்பண்டங்கள் | அசுரன் |
| விருந்து | வீணுகை | பகவான் |

[சுப்பன் முருகனைச் சந்திக்கிருன்]

சுப்பன் :—முருகா ! இன்று பள்ளிக்கூடம் இல்லை; தெரியுமா ?

முருகன் :—தெரியுமே. இன்று தீபாவளி அல்லவா?

சுப்பன் :—ஆமாம். தீபாவளிக்கு நீ என்ன எல்லாம் வாங்கி இருக்கிருய் ?

TB
031(2)
N41



முருகன்:—நான் இன்னும் வாங்கவில்லை. எங்கள் தகப்பனார் எங்களுக்கெல்லாம் புதிய உடைகள் வாங்கிவிட்டார்.

சுப்பன்:—உனக்கு என்ன உடைகள் வாங்கியிருக்கிறார்? தெரியுமா?

முருகன்:—தெரியும். நேற்று இரவு அவர் அவற்றை எனக்குக் காட்டினார். அரைக்கு ஒரு சாய வேஷ்டியும் மேலுக்கு ஒரு சொக்காயும் வாங்கியிருக்கிறார்.

சுப்பன்:—என் தகப்பனாரும் எனக்கு அப்படியே தான் வாங்கி வைத்திருக்கிறார். நீ படாசு வாங்க வில்லையா?

முருகன்:—எனக்கு அதிகமாகப் படாசு பிடிக்காது. வீணாக அதில் காசைப் போட நான் விரும்பவில்லை. என் தங்கைக்காக என் தகப்பனார் சில வாணங்கள் வாங்குவார். அதை நானும் கொளுத்துவேன்.

சுப்பன்:—எனக்குப் படாசில் அதிக ஆசை. நான் இன்று மாலையில் கடைக்குப் போய் நிறைய படாசுக் கட்டுக்கள், மத்தாப்பூ, பூத்திரி, வாணம் முதலானவை வாங்குவேன். அதிருக்கட்டும்; இந்தத் தீபாவளி எதற்காக? தெரியுமா?

85063

முருகன்:—தெரியும். நரகாசுரன் என்ற அரக்கன் ஒருவன் இருந்தானும். அவன் நல்லவர்களைத் துன்பப் படுத்தினனும். அவனைக் கிருஷ்ண பகவான் கொன்ருராம். அப்படிக் கொன்றது ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முந் தின நாளாம். அந்த நாளை நாம் பண்டிகையாகக் கொண்டாடுகிருேம்.

சுப்பன்:—அதை எப்படிக் கொண்டாடுவது?

முருகன்:—விடியற்காலை இருட்டில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்து, புது ஆடைகள் உடுப்போம். பிறகு இனிய தின்பண்டங்களைத் தின்று வேடிக்கையாகச் சில படாசுகளைச் சுடுவோம். அடுத்த நாள் நல்ல விருந்து உண்போம்.

சுப்பன்:—ஆமாம். அதற்காகத்தான் என் தாயார் தின்பண்டங்கள் எல்லாம் செய்கிருர். நீயும் வா. நாம் தின்பண்டங்கள் வாங்கித் தின்போம்.

[இருவரும் போகிருர்கள்

## பயிற்சி

1. விடைசொல்:—

(1) இந்த மாதத்தில் ஏதேனும் பண்டிகை நடந்ததா?

(2) ஒருவர் ஜவுளிக்கடை வைக்க, மற்றவர்கள் அங்கே போய் வியாபாரம் செய்வதாக நடியுங்கள்.

(3) ஒவ்வொருவருக்கும் தீபாவளிக்காக எட்டணு கொடுத்திருப்பதாக நினையுங்கள். அதை எப்படிச் செலவிடுவீர்கள்?

**2.** விடைஎழுது:—

(1) உன் தினசரி உடைகள் யாவை?

(2) படாசுக் கடையில் என்ன விற்கும்?

(3) நரகாசுரனை யார் கொன்ருர்?

**3.** கோடிட்ட இடங்களில் உரிய சொற்களை எழுது.

சங்கராந்தி——மாதத்தில் வரும்.

நவராத்ரி——மாதத்தில் வரும்.

கார்த்திகை——மாதத்தில் வரும்.

**4.** எழுது:—

தீபாவளி ஐப்பசியில் வரும்.



## 22. கவனிப்பு இல்லாத சிறுவன்

| | | |
|---|---|---|
| கவனம் | தவறு | கண்ணுங் கருத்துமாய் |
| கவலை | சந்தோஷம் | தண்டித்தார் |
| முகடு | ஆச்சரியம் | தீர்மானித்தான் |
| மூடத்தனம் | கல்விமான் | தேறினன் |
| வெட்கம் | ஒழுங்காய் | சம்பாதித்தான் |

1. ஒரு சிறுவன் பாடசாலையில்கல்வி கற்று வந்தான். அவன் பெயர் செல்வன். அவனுக்கு எதைப் பற்றியும் கவலையில்லை. அவன் நன்றாய்ச் சாப்பிடுவான்; நல்ல உடைகளை உடுத்துக் கொள்வான். பாடசாலைக்கு ஒழுங்காய்ப் போவான். ஆனால் பாடம் படிப்பது இல்லை. உபாத்தியாயர் சொல்வதைக் கவனிக்கமாட்டான்.

2. ஒரு நாள் உபாத்தியாயர் பாடம் சொல்லிக் கொண்டு இருந்தார். மற்றைச் சிறுவர்கள் எல்லாரும் உபாத்தியாயர் சொல்வதைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டு இருந்தார்கள்.

3. செல்வன் மாத்திரம் அவர் சொல்வதைக் கவனிக்கவில்லை. அப்பொழுது முகட்டிலே ஓர் எலி ஓட்டுக்குள் நுழைந்துகொண்டு இருந்தது. செல்வன் அதைப் பார்த்துக்கொண்டு இருந்தான்.

4. உபாத்தியாயர் சிறுவர்களைப் பார்த்து, "நுழைந்ததா?" என்று கேட்டார். சிறுவர்கள் அனைவரும், "ஆம்" என்றார்கள். செல்வன் மாத்திரம், "ஐயா, எல்லாம் நுழைந்தது; வால் மாத்திரம் நுழைய வில்லை" என்றான்.

5. உபாத்தியாயர் அவனுடைய மூடத்தனத்தைக் கண்டு அவனைத் தண்டித்தார். மற்றைப் பிள்ளைகள் எல்லாரும் சிரித்தார்கள். செல்வன் வெட்கமடைந்து அழுதான். தன் பாடத்தைக் கவனியாமல் இருந்தது தவறு என்று அவன் தெரிந்து கொண்டான்.

6. அன்று முதல் அவன் பாடத்தைக் கவனிக்கத் தீர்மானித்தான். தன் பாடங்களை நன்றாகப் படித்து வந்தான். உபாத்தியாயர் சந்தோஷம் அடைந்தார். அவனைப் பெற்றவர்களும் மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள்.

7. செல்வன் கல்வியிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தான். உபாத்தியாயர் சொல்வதை நன்றாய்க் கவனித்துக் கற்று வந்தான். கல்வியில்

தேறினான். நல்ல பிள்ளை என்று பெயரெடுத்தான். அவனைக் கண்டவர்கள் யாவரும் ஆச்சரியம் அடைந்தார்கள்.

8. செல்வன் பெரியவன் ஆனபோது நல்ல கல்விமான் என்று பெயர் பெற்றான். நன்றாய்ச் சம்பாதித்தான்; ஏழைகளுக்கு உதவி செய்தான்; தன்னுடைய ஊருக்குப் பல நன்மைகளைச் செய்தான்.

## பயிற்சி

**1.** விடை சொல்:—

(1) பள்ளிக்கூடத்துக்காக இன்று நீ வீட்டில் என்ன வேலை செய்தாய்?

(2) உபாத்தியாயர் செல்வனை என்ன சொல்லிப் பரிகாசம் செய்திருப்பார்?

**2.** விடை எழுது:—

(1) எலி எங்கே நுழைந்து கொண்டிருந்தது?

(2) செல்வன் பிறகு எப்படிக் கெட்டிக்காரன் ஆனான்?

(3) செல்வன் தன் ஊருக்கு என்ன என்ன நன்மைகள் செய்தான்?

**3.** பின் வருவனவற்றைக் கோடிட்ட இடங்களில் எழுது. எதைப்பற்றியும் மாத்திரம் கண்ணுங் கருத்துமாய்.


(1) மற்ற எல்லாப் பாடங்களையும் படித்துவிட்டேன்; கணக்கு——போடவில்லை.

(2) ——படித்தால் முதன்மையாய் இருக்கலாம்.

(3) சோம்பேறிக்கு——கவலையில்லை.

(4) எழுது:—

எல்லாம் நுழைந்ததா? வால்மட்டும் நுழையவில்லை.




## 23. பேராசையின் பயன்

| | | |
|---|---|---|
| பயன் | உருவம் | வேறொரு |
| மாமிசம் | தெளிந்த | வந்திருந்து |
| கால்வாய் | கடக்க | அகலமாய் |
| குறுக்கு | அகன்ற | திருப்தியாய் |

1. ஒரு நாய் மாமிசத்துண்டு ஒன்றை எங்கேயோ திருடிக்கொண்டது. அந்தத் துண்டை வாயில் கௌவிக்கொண்டு அது போய்க்கொண்டிருந்தது.

2. இப்படி அது போகும்போது வழியில் அகன்ற கால்வாய் ஒன்று குறுக்கிட்டது. அதில் தெளிந்த நீர் ஓடிக்கொண்டிருந்தது. கால்வாய் அகலமாய் இருந்ததால் நாய் அதைத் தாண்டிப் போகக்கூடவில்லை.

3. ஆனாலும், நாய் அதைத் தாண்டிப்போக எண்ணிற்று. அங்கும் இங்கும் ஓடிப் பார்த்தது. அங்கே கால்வாயைத் தாண்டிப் போவதற்கு ஓர் அகலமான பலகை அதன் குறுக்கே ஓரிடத்தில் போடப்பட்டிருந்தது.

4. நாய் மிகுந்த சந்தோஷத்தோடு அதன் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தது. இப்படிப் போகும்போது அதன் உருவம் கால்வாயிலுள்ள தெளிந்த நீரில் தோன்றிற்று. "ஓகோ! என்னைப் போல வேறொரு நாய் மாமிசத் துண்டைக் கௌவிக்கொண்டு நீரில் இருக்கிறது, அந்தத் துண்டையும் நான் பிடுங்கிக் கொள்ளவேண்டும்" என்று அது தீர்மானித்துக்கொண்டது,

5. உடனே அந்த நாய் கால்வாயில் குதித்து வாயைத் திறந்துகொண்டு அந்தத் துண்டையும் கௌவிற்று. நாயின் வாயிலிருந்த மாமிசம் நீரில் விழுந்து மறைந்து போயிற்று. அது கௌவ எண்ணிய துண்டும் கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்து போயிற்று.

6. நாய்க்கு இப்பொழுதுதான் புத்தி வந்தது. "ஐயோ, மூடத்தனமாய் வாயிலிருந்த மாமிசத்தையும் இழந்தேனே!" என்று அது விசனப்பட்டது. பிறகு அந்த நாய் கால்வாய் நீரில் மூழ்கி இறந்தது. அந்த நாய் அதிக ஆசையினால் உள்ளதையும் இழந்து உயிரையும் துறந்தது.

7. இந்தச் சிறிய கதையினால் என்ன தெரிந்துகொண்டீர்கள்? நமக்கு உள்ளது போது

**மென்று நாம் எப்பொழுதும் திருப்தியாய் இருக்க வேண்டும்.**

## பயிற்சி

**1. விடை சொல் :—**

(1) படத்தில் நாய் என்ன செய்து கொண்டிருக்கிறது ?

(2) தண்ணீரில் நாயின் உருவம் எப்படித் தெரியும்?

(3) நாய் என்ன செய்திருந்தால் தன் துண்டை இழந்திராது ?

**2. விடை எழுது :—**

(1) வாய்க்காலைக் கடக்க என்ன போடப்பட்டிருந்தது ?

(2) உருவத்தைக் கண்டு நாய் என்ன எண்ணிற்று ?

(3) மாமிச உருவம் ஏன் மறைந்து போயிற்று ?

**3. பின் வருவனவற்றைக் கோடிட்ட இடங்களில் எழுது.**

ரயில் படகு பாலம் சாலை.

(1) வழிநடக்க——உதவும்.

(2) ஆற்றின் அக்கரைக்குப் போக———உதவும்.

(3) நெடுந்தூரம் போக———உதவும்.

(4) கடலில் மீன் பிடிக்க———உதவும்.

**4. எழுது :—**

அதிக ஆசை அதிக நஷ்டம்.



## 24. கிளி

| | | |
|---|---|---|
| அழகு | சத்துரு | பெரும்பாலும் |
| அலகு | பொந்து | கூராய் |
| இரேகை | ஏராளமாய் | ஆகையால் |
| வகை | சாதாரணமாய் | ஜாக்கிரதையாய் |

1. கிளிகள் நம்முடைய தேசத்தில் ஏராளமாய் உண்டு. அவைகளுக்குக் கூடு கட்டத் தெரியாது. ஆகையால் அவை சாதரணமாய் மரப்பொந்துகளில் வசிக்கும்.

2. கிளியின் நிறம் பெரும்பாலும் பச்சையாயிருக்கும். வெள்ளை, சிவப்புக்கிளிகளும் உண்டு. அவை அதிகமாய் நமது தேசத்தில் இல்லை. ஐந்து

நிறங்களையுடைய ஒருவகையான கிளி உண்டு. அதற்குப் பஞ்சவர்ணக் கிளி என்று பெயர். அதை வீடுகளில் அழகுக்காக வளர்ப்பார்கள்.

3. பச்சைக்கிளி மற்றைக் கிளிகளைவிடச் சிறியது. அதன் தலை சிறியது; கண்கள் வட்டமானவை. அதன் அலகு சிவப்பாயிருக்கும். அந்த அலகு முனையில் வளைந்து இருபுறங்களிலும் கூராய் இருக்கும். அவ்வலகினுல் அது கொட்டைகளை உடைத்துத் தின்னும்.

4. கிளியின் கழுத்தில் அழகான இரேகை உண்டு. கிளியின் உடல் சிறுத்துச் சிறிது நீளமாயிருக்கும். வால் நீளமானது. அதற்கு இரண்டு இறக்கைகள் உண்டு. ஆயினும் அது அதிக உயரத்தில் பறக்காது.

5. அதன் கால்கள் மிகவும் மெல்லியவை. அதன் பாதத்தில் முன் இரண்டும் பின் இரண்டுமாக நான்கு விரல்கள் உண்டு. அவைகளின் உதவியால் அது மரங்களில் ஏறும்.

6. கிளி தானிய வகைகளையும் பழங்களையுமே தின்னும். கிளிக்குப் பேசக் கற்றுக் கொடுக்கலாம். ஆயினும் அது சொல்லிக் கொடுத்தவைகளையே சொல்லும்; தானுக ஒன்றும் சொல்லாது.

7. பூனை கிளிக்குச் சத்துரு; கிளியைக் கண்டவுடன் பூனை அதைக் கொல்லும். ஆகையால் கிளி

**வளர்ப்பவர்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.**

## பயிற்சி

**1.** விடை சொல் :—

(1) கிளியைப்பற்றிய கதை ஏதேனும் சொல்லு.

(2) உன் ஊரிலுள்ள பறவைகளின் பெயர்களைச் சொல்லு.

(3) பஞ்சவர்ணங்கள் யாவை ?

**2.** விடை எழுது :—

(1) ஏன் கிளிகள் பொந்துகளில் வசிக்கின்றன ?

(2) கிளியின் அலகு எப்படி இருக்கும்? அதன் உபயோகம் என்ன ?

(3) கிளியின் சத்துரு யார் ?

**3.** பின் வருவனவற்றை வாக்கியங்களில் உபயோகி :—

ஏராளமாய், சாதாரணமாய், மிகவும்

**4.** எழுது:—

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.

செய்யுட் பாடம்

# 1. உலகநீதி

1. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள்செய்வாரோடு இணங்கவேண்டாம்
5. போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
6. நெஞ்சாரப்பொய்தன்னைச்சொல்லவேண்டாம்
7. நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்.
8. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
9. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்.
10. மனம்போனபோக்கெல்லாம்போகவேண்டாம்
11. தனந்தேடி உண்ணுமல் புதைக்கவேண்டாம்.
12. தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
13. குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்
14. கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
15. கோயில் இல்லாஊரில் குடியிருக்கவேண்டாம்.
16. மூத்தோர் சொல் வார்த்தைதனைமறக்க வேண்டாம்.
17. செய்தநன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
18. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.

TB
031(2)
N41

## 26. ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. ஈவது விலக்கேல்.
4. உடையது விளம்பேல்.
5. ஊக்கமது கைவிடேல்.
6. எண் எழுத்து இகழேல்.
7. ஏற்பது இகழ்ச்சி.
8. ஐயம் இட்டு உண்.
9. ஓதுவது ஒழியேல்,
10. சனி நீராடு.
11. தந்தைதாய்ப்பேண்.
12. நன்றி மறவேல்.
13. பருவத்தே பயிர்செய்.
14. வஞ்சகம் பேசேல்.
15. இளமையிற் கல்.
16. தேசத்தோடு ஒத்து வாழ்.
17. குணமது கைவிடேல்.
18. கூடிப் பிரியேல்
19. கெடுப்ப தொழி.
20. சோம்பித் திரியேல்
21. நோய்க்கு இடங்கொடேல்.
22. வித்தை விரும்பு.

---

THE B. N. PRESS, MOUNT ROAD, MADRAS.

85063

2321